ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2147/75 - 2019 නොවැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2019.11.01

*2147/75 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

*மதுவரி அறிவித்தல் இல. 06/ 2019*

**ஒட்டுத்துண்டு மற்றும் ஒட்டுத்துண்டு முகாமை முறைமை**

*திருத்தப்பட்டவாறான, மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 08 ஆம் மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும், அதே சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதிய, 2128/ 30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 04/ 2019 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளை பின்வருமாறு திருத்தியமைக்கின்றேன்.*

*1. 3 ஆம் ஒழுங்குவிதியில்,*

*(அ) முதலாவது காப்பு வாசகத்தினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் காப்பு வாசகத்தினை பதிலீடு செய்வதன் மூலம் :*

*“ஆயினும் எவ்வாறாயினும்,*

*(i) இறக்குமதியாளரொருவர், 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னரும், மற்றும்*
*(ii) உரிமம்பெற்ற உற்பத்தியாளரொருவர், 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னரும்,*

*அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ள, தற்போது கையிருப்பிலுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருட்கள் மீது ஒட்டுத்துண்டுகளை ஒட்டுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.”. மற்றும்*

1A - PG 4690 — 592 (2019/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) இரண்டாவது காப்பு வாசகத்தினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்பு வாசகத்தினை பதிலீடு செய்வதன் மூலம் :

(i) இறக்குமதி செய்யப்பட்ட மதுபானம் தொடர்பில், 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னரும், மற்றும்

(iii) உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபானம் மற்றும் உள்நாட்டு மதுபானம் என்பன தொடர்பில், 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னரும்,

"அவ்வாறே, அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள மதுவரி விதிக்கத்தக்க பொருள் இருப்பொன்றினை வைத்திருக்கும் விற்பனையாளரொருவர் அப்பொருட்கள் மீதும் ஒட்டுத்துண்டுகளை ஒட்டுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.".

2. 13 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள "அறுபது நாட்கள் (60) என்ற சொற்கள் மற்றும் இலக்கங்கள்" என்பனவற்றிற்குப் பதிலாக "இருநூற்று ஐம்பத்து ஐந்து (255)" என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களைப் பதிலீடு செய்தல்.

மங்கள சமரவீர,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2019, நவெம்பர் 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.